**DEPOSITION OF WITNESS**

(ChapterXXIII Code of Criminal Procedure)

**-----------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR**

**CC.No.236/2017**

**Date : 24.02.2025**

**PW1 கணேசன் த/பெ.நாகலிங்கம்**

**அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் ஏற்கெனவே இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். எனக்கு முன்னால் துணை பதிவாளராக பணிபுரிந்தவர் சிவஞானம் என்பவரை பெரம்பலூர் நுகர்வோர் மொத்தவிற்பனை பண்டக சாலையில் நடைபெற்ற மோசடி தொடர்பாக பிரிவு 82ன் கீழ் விசாரணை அதிகாரி நியமித்திருந்தார். மேற்படி சிவஞானம் என்பவர் என்னிடம் பிரிவு 82ன் கீழான விசாரணை அறிக்கையை கடந்த 12.08.2008 ஒப்படைத்தார். அந்த விசாரணை அறிக்கையை இதற்கு முன்னே முதல் விசாரணையில் குறியீடு செய்யாமல் விடுபட்டுவிட்டது. என்னிடம் காட்டப்படும் அறிக்கைதான் அந்த விசாரணை அறிக்கை. 31.10.2007 **தேதியிட்ட பிரிவு 82ன் கீழான விசாரணை அறிக்கையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.45 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன் மேற்கண்ட ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது). போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1 மற்றும் 6 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போதைய பெரம்பலூர் சரக கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் யார் என்று எனக்கு தெரியாது. அ.சா.ஆ. 45ல் உண்மை நகல் என்று சான்றிட்டவர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.45 ஆவணத்தில் எத்தனை ஆவணங்கள் பட்டியலிட்டு கொடுக்கப்பட்டது என்று

எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பண்டக சாலைக்கு என இருப்பு பதிவேடு நாள்வழிபதிவேடு மற்றும் துணை விதி உள்ளது, இதனை ஆ.சா.ஆ.45 ஆவணம் உடன் இணைத்து கொடுக்கப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது. 06.06.2008 முதல் 09.11.2009 வரை கூடுதல் பொறுப்பில் இருந்த காலத்தில் எத்தனை முறை பண்டகசாலைக்கு ஆய்வு செய்ய சென்றேன் என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை.

அ.சா.ஆ.45 ஐ அலுவலகத்தில் தாக்கல் செய்யும்போது என்னென்ன ஆவணங்களை இணைத்து அலுவலகத்தில் வழங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் அறிக்கையை அசலாகத்தான் தாக்கல் செய்தார். நான் கொடுத்த புகாருடன் அசல் அறிக்கையை இணைத்துதான் அனுப்பியிருந்தேன் என்றால் சரிதான். 09.03.2017 அன்று முதல் விசாரணையின்போது விசாரணை அறிக்கையை குறியீடு செய்ய நான் முன்வரவில்லை என்றால் என்னிடம் கேட்கவில்லை, அதனால் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்தரப்பு வழக்கறிஞர் கேட்கவில்லை. தற்போது என்னிடம் யார் கேட்டுக்கொண்டதால் இந்த ஆவணத்தை குறியீடு செய்ய சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் அரசு தரப்பு கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

தற்போது குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.45 உண்மை நகலுடன் அசல் அறிக்கையை ஒப்பிட்டு பார்த்தால்தான் அ.சா.ஆ.45ன் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான்அ.சா.ஆ. 45ன் அசல் ஆவணம் எங்குள்ளது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.45 சான்று அளிக்கப்பட்ட ஆவணம் என்பதால் அது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் அது பற்றி என்னால் கருத்து சொல்ல இயலாது.

<u>2 மற்றும் 3வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கூட்டுறவு சங்கங்களின் சட்டப்படி மேல் அதிகாரி அனுப்பிய சுற்றறிக்கையில் கையெழுத்திட்டதால் மட்டுமே குற்றவாளி என்று சொல்ல

இயலாது என்றால் சரியல்ல. விருப்ப ஓய்வில் செல்லும் ஒருவர் அவர் ஓய்வு பெற்ற பிறகு நடந்த சம்பவத்திற்கு அவரை குற்றவாளியாக்க முடியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.45 சான்று அளிக்கப்பட்ட ஆவணம் என்பதால் அது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றாலும், அதை ஆவணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்றாலும் அது பற்றி என்னால் கருத்து சொல்ல இயலாது.

**<u>4, 5, 7 மற்றும் 8வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு முன்பு பணிபுரிந்த துணை பதிவாளர் பிரிவு 82 விசாரணைக்கு உத்தரவிட்டதற்கான உத்தரவுகளை போலீஸார் கேட்டு வாங்கினார்களா என்றால் என்னிடம் கேட்டு வாங்கினார்கள். நான் 06.06.2008 அன்று பெரம்பலூர் சரக கூடுதல் பொறுப்பு ஏற்றேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.45 அறிக்கையின் தொடர்ச்சியாக பிரிவு 87 தண்ட தீர்வை நான்தான் பிறப்பித்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ. 45 ஆவணத்தின் அடிப்படையில் தமிழ்நாடு தண்ட தீர்வு பிரிவு 87(1) நாள் 17.03.2009 பார்வையிட்ட 26.02.2008, 12.08.2008மற்றும் 27.02.2008 ஆகிய ஆய்வறிக்கைகளில் கூறப்பட்ட சங்கதிகளை குறித்து எனக்கு முழு விவரம் தெரியாது என்றால் சரிதான். (மேற்கண்ட ஆவணத்தின் நகலை காண்பித்து வினா எழுப்பியதால் அரசு தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது).

வங்கியில் உள்ள மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் அல்லது தணிக்கை அறிக்கையில் சுட்டிகாட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பாகவும், கூட்டுறவு சங்கத்திற்கு நிதிஉதவி வழங்கும் வங்கியின் குறைபாடுகளை குறித்த வேண்டுகோள் கடிதத்தின்படியும் பிரிவு 82ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்படும் என்றால் சரிதான். பொது புகார் வந்தாலும் விசாரணைக்கு உத்தரவிடப்படும். அ.சா.ஆ.45 அறிக்கையில் எந்த புகாரின் அடிப்படையில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.45 அறிக்கையில் எந்தெந்த தேதிகளில், எந்தெந்த வங்கிகளிலிருந்து

ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது எந்தெந்த தேதிகளில் அந்த ஆவணம் ஒப்படைக்கப்பட்டது என்ற விவரங்கள் இல்லை என்றால் சரிதான்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் 4 மற்றும் 5வது எதிரிகள் மீது பணி நீக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.45 அறிக்கையின் அடிப்டையில் 4, 5 எதிரிகள் உள்ளிட்ட 20 நபர்களின் மீது தண்ட தீர்வை நடவடிக்கை எடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. தண்ட தீர்வை விதிக்கப்பட்ட நபர்களில் பட்டியல் சாட்சி 16 டி. செல்வராஜ், பட்டியல் சாட்சி 18 டி. லெட்சுமி, பட்டியல் சாட்சி 7 வீரபாஸ்கர், பட்டியல் சாட்சி 13 கேசவன் ஆகிய நபர்கள் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கபட்டுள்ளனரா என்றால் சரிதான். மேற்படி நபர்களின் மீது குற்ற வழக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்கள் மீது தண்ட தீர்வை நடவடிக்கை எடுக்கப்பட்டதால் குற்ற வழக்கில் சேர்க்கவில்லை.

தண்ட தீர்வை நடவடிக்கு எடுக்கப்பட்டு மாவட்ட நீதிமன்றத்தின் மூலமாக அதை வசூல் செய்வதற்காக நான் எடுத்த நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் எனக்கு ஞாபகமில்லை. விசாரணைக்கு உத்தரவிடப்பட்ட நாளிலிருந்து 3 மாதத்திற்குள் விசாரைணை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டிய விசாரணை ்அலுவலர் அந்த கால நீட்டிப்பு கடந்தும் ஒரு மாத காலம் அவகாசம் கேட்டதா கூறியுள்ள நிலையில் 12.02.2008 அன்று இந்த இறுதி அறிக்கையை என்னிடம் சமர்ப்பித்தற்கான கால தாமதத்திற்கான தாமத்தையோ கால நீட்டிபிற்கான வேண்டுகோள் கடிதத்தையோ நான் பார்வையிட்டு அதற்கான காரணத்தை தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. ஏன் அவ்வாறு கால தாமதம் ஆனது என்பதற்கு உண்டான காரணத்தை தெரிந்துகொண்டேனா என்றால் ஞாபகமில்லை.

நான் கூட்டுறவு துறையில் உயர் அதிகாரியாக இருந்த காரணத்தினால் மேற்படி குறைபாடுகள் உடைய விசாரணை அறிக்கையை பெற்று எதிரிகளின் மீது பழிவாங்கும் நோக்கத்துடன் நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரியல்ல.

விசாரணை நடைபெற்றது சம்மந்தமாக எந்தெந்த இடங்களில்,எந்தெந்த தேதிகளில் விசாரணை நடைபெற்றது அதற்குண்டான வாக்குமூலங்கள் ஆகியவற்றை போலீஸாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் துணை பதிவாளராக இருந்தபோது பதிவாளராக பொறுப்பு எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்களை போலீஸார் என்னிடம் கேட்டுபெறவில்லை. பிரிவு 82ன் கீழ் விசாரணை உத்தரவிடப்படுவதற்கு முன்பு சம்மந்தப்பட்ட காலக்கட்டத்தில் தணிக்கை நடைபெறவில்லை. ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமானது ஒரு வருடத்தின் முடிவிலிருந்து 6 மாதத்திற்குள் தணிக்கை செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

அவ்வாறு தணிக்கை செய்யப்படாத கூட்டுறவு வங்கிகளின் நடவடிக்கைகளை முடக்கம் செய்ய வேண்டிய சூழ்நிலை இருந்தபோது அவ்வாறு செய்யாமல் நான் நடவடிக்கை எடுத்தது தவறு என்றால் சரியல்ல. அ.சா.ஆ.45 ஆவணம் அசல் அறிக்கையை பார்த்து தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணத்தை பார்த்தால்தான் அதில் என்னுடைய அலுவலக முத்திரை மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் சிற்றெழுத்துக்கள் இருக்கும் என்றால் சரிதான். விசாரணை அறிக்கையில் 1 முதல் 10 மற்றும் 19வது பக்கங்களில் விசாரணை அதிகாரியின் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். அறிக்கையின் இணைப்பில் உள்ள 6 ஆவணங்களில் ஒரு ஆவணத்தில் மட்டும் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். நான் துணை பதிவாளர் என்ற பணி அதிகாரத்தை தவறுதலாக பயன்படுத்தி எதிரிகளின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொண்டதன் காரணத்தினால்தான் பணி ஓய்வு பெறுவதற்கு முதல்நாள் என்னுடைய உயர் அதிகாரியால் பணி நீக்கம் செய்யப்பட்டேன் என்றால் சரியல்ல.

**<u>அரசு தரப்பில் மறுவிசாரணை</u>**

அ.சா.ஆ.45 சான்றிட்ட ஆவணத்தை சான்றிட்ட நபர் யார் என்றால் துணை பதிவாளர், பெரம்பலூர்.

**<u>1 மற்றும் 6 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.ஆ. 45 ல் சான்றிட்ட நபரின் கையொப்பம் எனக்கு பரிட்சயமா என்றால் இல்லை. இந்த ஆவணத்தை நான் சான்றிட்ட அலுவலரிடமிருந்து கேட்டுபெறவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்தை சான்றிட்ட அலுவலரிடமிருந்து யார் கேட்டு பெற்றார்கள்என்ற விவரம் எனக்கு தெரியாது. அரசு தரப்பு கேட்டுக்கொண்தற்கிணங்க அ.சா.ஆ. 45 ஆவணம் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரிதான். **மேற்கண்ட குறுக்கு விசாரணையை மற்ற எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

Sd/-.

Judicial Magistrate No.1
Perambalur.